[1992 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 427, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

427—

கூட்டுறவுச் சங்கங்களில் புதிய விவசாயிகளை உறுப்பினராகச் சேர்த்தல்.

* 7935—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயி அல்லாத உறுப்பினர்களை நீக்கிவிட்டு புதிய விவசாயிகளை உறுப்பினர்களாகச் சேர்த்து தேர்தல் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயி இல்லாத உறுப்பினர்களை கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நீக்குகின்ற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. தகுதி பெற்ற உறுப்பினர்கள் தற்போது கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்துவதற்காக பினாமி உறுப்பினர்களை சேர்த்திருக்கிறார்கள். வெவ்வேறு கிராமங்களிலிருந்து எல்லாம் ஆட்களைக் கொண்டு வந்து, புஸ்தகங்களை ஒன்றியச் செயலாளர் வீட்டில் வைத்துக் கொண்டு எழுதி, கையெழுத்துக்கூட போடாமல் உறுப்பினர்களைச் சேர்த்துதான் தேர்தல் நடத்ினார்கள் என்று பல முறை நான் பேசியிருக்கிறேன். நீங்களும் பதில் அளித்து இருக்கிறீர்கள். ஆனால் அந்த போலி உறுப்பினர்களை நீக்கிவிட்டுத்தான் தேர்தல் நடத்த வேண்டும். அப்போது தான் அது நன்றாக இருக்குமே தவிர, அந்த போலி உறுப்பினர்களை நீக்காமல் நடத்துவது முறையாக இருக்காது. ஆகவே அந்தப் போலி உறுப்பினர்களை நீக்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறதா ? அந்த உத்தரவு இது வரையில் வரவில்லை என்று சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவுத் துறை தேர்தலின்போது நிறைய போலி உறுப்பினர்கள் சேர்க்கப்

1992 ஏப்ரல் 1]

பட்டுள்ளதாக புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட போலி உறுப்பினர்களை அதாவது தகுதி இல்லாத உறுப்பினர்களை நீக்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத் திருத்தத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே அரசு கொண்டு வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிவிப்புக்கு மிக நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதை விரைந்து செய்ய வேண்டும். ஏனென்றால் மே மாதம் 31 ஆம் தேதிக்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பது தெரிந்ததே. ஆகவே அதற்குள்ளாக இதைச் செய்ய வேண்டும். மேலும் அங்கு உறுப்பினர்களை சேர்ப்பதற்கு எங்களுக்கு உரிமையையும் அங்கீகாரத்தையும் நீங்கள் வழங்க வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த உறுப்பினர்களை கூடிய விரைவில் சேர்ப்பதற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைச் சேர்க்கின்ற சங்கங்கள் தனியாக இருக்கின்றன. வேறு தொழில் செய்பவர்களுக்கும் தனித் தனியாக கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. எனவே விவசாயிகளை மட்டும் எல்லா சங்கத்திலும் சேர்க்க முடியாது. தகுதி வாய்ந்த சங்கங்களில் எல்லா விவசாயிகளும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். முன்பு நடைபெற்ற தவறுகள் இந்த முறை நடக்காது. தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்க தேர்தல் நடைபெறுவதாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தவுடன் ஒவ்வொரு பகுதியிலும் சென்று பொதுவாக அனைத்து நபர்களும் அந்தந்த உறுப்பினர்கள் லிஸ்டைக் கேட்டு போலி உறுப்பினர்களை களைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது அவர்கள் எல்லாம் கூறிவிட்டார்கள். போலி உறுப்பினர்கள் என்று யாரும் இல்லை. எல்லோரும் விவசாயிகளே. பால் சங்கம்

என்றால் எல்லோரும் பால் வழங்குபவர்களே என்று கூறிவிட்டார்கள். எனக்குத் தெரியும். சென்ற முறை தேர்தல் நடைபெற்றபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலகங்காதரன், துணைக் கேள்வி என்ன? அதாவது இரண்டு வாக்கியங்களில் உங்களுடைய கேள்வி முடியவில்லை என்றால், அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன். இது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும்

திரு. ஜெ. பாலகங்காதரன் : எனவே அந்த விவசாயி கூட்டுறவுச் சங்கம் என்றால் விவசாயிகளையும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்றால் பால் உற்பத்தியாளர்களையும், நூல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்றால் நூல் உற்பத்தியாளர்களையும் அவ்வாறு அந்தந்த நபர்களை மட்டும் சேர்க்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ? போலி உறுப்பினர்களை களைய இப்போதே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறிய மாதிரி இப்போது இருக்கின்ற 1983-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட விதிகளை 23(2)-ஐத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி திருத்தப்பட்டவுடனே தகுதியற்ற உறுப்பினர்கள் அதாவது போலி உறுப்பினர்கள் நீக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில நபர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் சொல்ல வேண்டிய சூழ்நிலையில் முன்னாள் அமைச்சர்கள் இந்த நெசவு கூட்டுறவுச் சங்கங்களில் இன்றைக்கு அங்கம் வகித்துக் கொண்டு இருக்கிறார்கள். சொல்லப்போனால் என்னுடைய தொகுதியில் முன்னாள் அமைச்சர் ** அதிலே இருக்கிறார். அவர்கள் நிச்சயமாக நெசவுத் தொழில் செய்யவில்லை. அடிதடி அரசியல் செய்வதுதான் அவர்கள் தொழில். இப்படிச் செய்கிற அவர்களை நீக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பெயர் நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1992 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, யார் யார் எந்தெந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் தகுதியற்றவர்கள் வெவ்வேறு சங்கத்திலே சேர்ந்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ரொட்டி தயாரிக்கின்ற தொழிற்சங்கத்தில் வழக்கறிஞராக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேலூரிலேயே உறுப்பினராகச் சேர்ந்தார் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இப்போது நீக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் திருத்தம் கொண்டுவருவது இன்னின்ன இலக்கணங்களைக் கொண்டவர்கள்தான் அதிலே உறுப்பினராக முடியும் என்றுதான் கொண்டுவர முடியும். ஆகவே அமைச்சர் இப்போதே ஒரு அரசு ஆணை பிறப்பித்து அந்தப் போலி உறுப்பினர்களை உடனடியாக நீக்குவதற்கு உத்தரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிரின்சிபல் அப்ஜெக்ட்டிவ் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட பிரின்சிபல் அப்ஜெக்டிவுக்கு ஒத்துவராத உறுப்பினர்கள் அல்லது எதிராக இருக்கின்ற உறுப்பினர்களைச் சேர்க்கக்கூடாது என்பதுதான் விதி. அதற்காகத்தான் இப்போது சட்டத்திருத்தமே கொண்டுவர இருக்கிறோம். அதை அரசாங்க உத்தரவின் மூலம் செய்ய முடியாது. சட்டத் திருத்தத்தின் மூலம் செய்ய இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 428. திரு. கு. சிவசுப்பிரமணியன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

428—

கடலூர் தொழிலாளர் நல நீதிமன்றத்திற்குக் கட்டிட வசதி.

*4574—திரு. கு. சிவசுப்பிரமணியன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கடலூரில் இயங்கும் தொழிலாளர் நல நீதிமன்றம் கட்டிட வசதி இல்லாத காரணத்தால் சரிவர இயங்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், நிரந்தரமாகச் செயல்பட இடம் தெரிவு செய்து கொடுக்க அரசு முன்வருமா ?